Registered as a News paper பக்கங்கள் - 08 விலை - ரூபா 07

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்

Eezhanatham

உங்கள் வியாபாரம் சிறக்க ஈழநாதத்தில் விளம்பரம் செய்யுங்கள்.

பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110
065-2226303

நாதம் 01 திருவள்ளுவர்ஆண்டு 2035 புரட்டாதி 30 16.10.2004 சனிக்கிழமை ஓசை 142

## தமிழீழ நீதிமன்றில் நிறுத்தப்பட்டு ஊர்காவல் படையினர் பிணையில் விடுவிக்கப்படுவர்

### திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அறிவிப்பு

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு ஊர்காவல் படையினரும் தமிழீழ நீதி மன்றில் நிறுத்தப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்படுவார்கள் என திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

இரு ஊர் காவல் படையினர் விடுதலை குறித்து திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் மேலும் தெரிவிக்கையில்:-

சிறிலங்கா படையினரால் கைது செய்யப்பட்ட போராளிகளையும், இரு ஊர் காவல் படையினரையும் விடுவிப்பது தொடர்பாக புரிந்துணர்வுடன் செயற்படுவதற்கான அழைப்பு விடுத்திருந்த போதும் அரசு அதனை ஏற்கவில்லை.


சட்ட ரீதியான நடவடிக்கைகளையே மேற்கொண்டதுடன் பத்து போராளிகளையும் பணம் மற்றும் ஆட்பிணைகளில் விடுதலை செய்துள்ளது. அதே போன்று இரு ஊர் காவல் படையினரும் திருமலையில் உள்ள தமிழீழ நீதிமன்றில் நிறுத்தப்பட்டு தமிழீழ நீதிமன்றின் சட்டத்திற்கமைய பிணையில் விடுவிக்கப்படுவார்கள் எனக் குறிப்பிட்ட எழிலன் இவர்களை விடுவிப்பது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதி நிதிகள் நேற்று வெள்ளிக்கிழமை தம்மை வந்து சந்தித்து கலந்துரையாடியதாகவும் மேற் கூறப்பட்ட கருத்தையே அவர்களிடமும் தெளிவு படுத்தியுள்ளதாக குறிப்பிட்டார்.

பெரும்பாலும் திங்கட்கிழமை இவர்களது விடுதலைக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# போர்நிறுத்த கண்காணிப்பு பணிக்காக பின்லாந்துக்கு புலிகள் நன்றி தெரிவிப்பு!

(நமது நிருபர்)

**மிகச் சிறப்பான பணியை முன்னெடுத்துவரும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் பின்லாந்து உறுப்பினர்களின் அற்புதமான பணிக்காக ஈழத்தமிழ் மக்கள் பின்லாந்து அரசிற்கு மிகவும் நன்றி யுள்ளவர்களாக இருக்கிறோம் என்று பின்லாந்து அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான இராஜாங்க செயலாளரிடம் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார்.**



நேற்று முன்தினம் வியாழக்கிழமை 14ம் திகதி பின்லாந்து வெளிநாட்டு அமைச்சு வளாகத்தில் நடைபெற்ற சந்திப்பில் பின்லாந்து அரசியல் வெளிவிவகார இராஜாங்க செயலாளர் திரு.ஜாக்கோலஜாவா அவர்கள் தலைமைலான குழுவினரைச் சந்தித்த விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், தற்போதைய அரசியல் நிலைப்பாடுகள் குறித்து விரிவாக விளக்கினர்.

இச்சந்திப்பில், ஸ்ரீலங்காவின் இனப்பிரச்சினை பற்றிய ஓர் அடிப்படை விளக்கம் உட்பட தற்போதைய

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## குடுவில் ஓட்டுத் தொழிற்சாலை காவலாளி மின்சாரம் தாக்கிப் பலி!

(அக்கரைப்பற்று நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் குடுவில் ஓட்டுத் தொழிற்சாலை காவலாளி நேற்று மின்சாரம் தாக்கி மரணமாகியுள்ளதாக தெரியவருகின்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது ஓட்டுத் தொழிற்சாலைக்கு அருகிலுள்ள வயல் பிரதேசத்தில் விலங்குகளுக்கு வைத்த மின்கம்பியில் சிக்குண்டே மரணமாகியுள்ளதாக மரண விசாரணையினை மேற்கொண்ட அக்கரைப்பற்று நீதிமன்ற பதில் நீதவான் எஸ்.எம்.முகைதீன் தெரிவித்துள்ளார். மரண விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக இவரது சடலம் அம்பாறைப் பொது வைத்திய சாலைக்கு அனுப்ப உத்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## கொக்கட்டிச்சோலையில் நேற்று அபிவிருத்தி வங்கி திறப்பு!

### புலமை பரிசில் மாணவர்க்கு பணம் வைப்பு

(சித்ரா)

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி நேற்று கொக்கட்டிச்சோலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் கே.தேவராஜா தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் அதிதிகளாக விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை நிர்வாகப் பொறுப்பாளர் தயாமோகன், மட்டு அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் குவேனி, பாராளுமன்ற உறுப்பினர் க.தங்கேஸ்வரி, ஹற்றன் நெசனல் வங்கி முகாமையாளர், ரமணதாஸ் இலங்கை வங்கி முகாமையாளர் கே.ஜெயானந்தம், மக்கள் வங்கி முகாமையாளர் சரவணபவான், நடு

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## வாழைச்சேனை பிரதேசத்தில் துப்பாக்கி சூடு இளம் குடும்பஸ்த்தர், இளைஞர் படுகாயம்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு வாழைச்சேனை, கறுவாக்கேணிஆகிய இடங்களில் வியாழன் இரவு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது. இரவு 8 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் தேவ நாயகம் சுதர்சன் (வயது 20) என்ற இளைஞர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் எதிர் கொண்ட நபரொருவர் இவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## நேற்று பஸ் வண்டி குடைசாய்ந்ததில் வந்தாறுமூலையில் பயணி ஒருவர் பலி!

(ஏறாவூர் நிருபர்)

வாழைச்சேனையில் இருந்து மட்டக்களப்பு நகர் நோக்கிச் சென்று கொண்டிருந்தபிரயாணிகள் பஸ் வண்டியொன்று வந்தாறுமூலைப் பிரதேசத்தில் குடை சாய்ந்ததில் பயணி ஒருவர் பலியானார். மேலும் நான்கு பேர் படுகாயமடைந்து மட்டக்களப்பு மற்றும் செங்கலடி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர்.

மட்டக்களப்பு போக்குவரத்துச் சாலையின் இந்தப் பஸ் வண்டி

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

### இன்றைய நாளில் தகவல்துளி

கத்தோலிக்க மதத்தவர்களுக்கிடையிலான பெரும்போர் 1562 தொடக்கம் 1598 வரை நிகழ்ந்தது.



கொக்கட்டிச்சோலை வங்கி திறப்பு விழா

# மதியுரைஞர் பாலசிங்கத்தை திங்களன்று சொல்ஹெய்ம் சந்திக்கிறார்

(நமது நிருபர்)

**நோர்வே அனுசரணைக் குழுவின் பிரதி நிதியான எரிக் சொல்ஹெய்ம் 18ஆம் திகதி திங்கட்கிழமையன்று லண்டனில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசவிருக்கின்றார் எனத் தெரிகின்றது.**



கடந்தவாரத்துக்கு முந்திய வார இறுதியில் ஜெனீவாவில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தையும் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனையும் புலிகளின் அரசமைப்பு விவகாரக் குழுவின் ஏனைய உறுப்பினர்களையும் சந்தித்துப்பேசிய எரிக்சொல்ஹெய்ம் அதனை முடித்துக்கொண்டு அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் சென்றிருந்தார் என்பது தெரிந்ததே. அந்த விஜயத்தை முடித்துக்கொண்டு தற்போது நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவுக்கு எரிக் சொல்ஹெய்ம் திரும்பியுள்ளார்.

இதேசமயம், அனுசரணைக் குழுவில் முக்கிய பங்காற்றும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் இந்தியாவில் நான்குநாள் விஜயத்தை முடித்துக்கொண்டு ஒஸ்லோ திரும்புகின்றார். அவரை ஒஸ்லோவில் சந்தித்துக் கலந்துரையாடிவிட்டு எரிக் சொல்ஹெய்ம் லண்டன் புறப்படுவார். திங்கட்கிழமை பிற்பகலில் அவர் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தை அவரது லண்டன் இல்லத்தில் சந்திப்பார். அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் இலங்கை விவகாரம் தொடர்பாகத் தாம் நடாத்திய பேச்சுக்களின் பெறுபேறுகளையும், இந்தியாவில் ஹெல்கிஸன் இலங்கை விவகாரம் தொடர்பாக நடாத்திய பேச்சுக்களின் விவரங்களையும், லண்டனில் திங்களன்று பாலசிங்கத்தைச் சந்திக்கும்போது எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

லண்டனில் பாலசிங்கத்தைச் சந்தித்த பின்னர் சொல்ஹெய்ம் ஒஸ்லோ திரும்புவார். அதற்கு இரண்டாவது நாள்



எதிர்வரும் 20 ஆம் திகதி புதன்கிழமை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் அரசியல் விவகாரக்குழு நோர்வே போய்ச்சேர்கின்றது. அக்குழுவினரை ஒஸ்லோவில் எரிக் சொல்ஹெய்ம் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# போரும் சமாதானமும் நூல் லண்டனில் வெளியாகிறது

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் ஆங்கிலத்தில் ஒரு புதிய அரசியல் வரலாற்று ஆய்வு நூலை எழுதியிருக்கின்றார். இந்நூல் இவ்வாரம் லண்டனில் வெளியிடப்படுகின்றது. 'போரும் சமாதானமும்' (WAR AND PEACE) என்ற தலைப்பில் 514 பக்கங்களைக் கொண்ட இந்த நீண்ட ஆய்வுநூல் தமிழீழ மக்களின் போராட்ட வரலாற்றினை ஆழமாகத் தரிசிக்கின்றது.

தமிழீழ மக்களின் தேசிய சுதந்திரப் போராட்டத்தின் படிநிலை வளர்ச்சியில் நிகழ்ந்த முக்கிய வரலாற்று நிகழ்வுகளைக் காலவரிசையில் பதிவுசெய்து விளக்கம் கொடுக்கின்றது அது.

இலங்கை சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து தோற்றம் எடுத்த, அதன் ஒடுக்குமுறை வடிவங்களும், அதற்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட அரசியல் போராட்ட நடவடிக்கைகளுமாகத் தமிழ்த் தேசியத்தின் தோற்றம், எழுச்சி பற்றி இந்நூலின் முதற் பகுதி துல்லியமாக எடுத்துக் கூறுகின்றது. அமைதி வழியிலான அஹிம்சைப் போராட்டம் அரச பயங்கரவாதத்தினால் நசுக்கப்பட்டதையடுத்து தமிழ் இளைஞரின் அரசியல் வன் முறைக் கிளர்ச்சி தோற்றம் கொண்ட காலகட்டத்தையும், அப்புற நிலையில் முகிழ்ந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத் தினது வளர்ச்சி, எழுச்சி, அகட்சி பற்றியும் இந்நூல் விரிவாக எடுத்தியம்புகிறது.

இலங்கையில் இந்திய அரசு தலையீடு செய்த கொந்தளிப்பான காலகட்டத்தையும் (1983முதல்1990 வரை), அவ் வரலாற்றுக் கால கட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் எதிர் கொண்ட சவால்களையும் நெருக்கடிகளையும் ஒரு நீண்ட அத்தியாயத்தில் விவரிக்கின்றார் பாலசிங்கம்.

விடுதலைப் புலிகள் பங்குகொண்ட சகல சமாதானப் பேச்சுக்களையும் ''இந்திய மத்தியஸ்தத்துடன் நிகழ்ந்த திம்பு பேச்சுக்களில் தொடங்கி நோர்வே அனுசரணையுடன் நடந்த சமீபத்திய பேச்சுக்கள்வரை'' அவற்றின் குறை, நிறைகளையும் தமது சொந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு திறனாய்வு செய்கிறார் பாலசிங்கம்.

தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்ட வரலாற்றை ஆழமாக ஆய்வுசெய்யும் இந்நூலில், இதுவரை வெளிவராத சுவாரசியமான தகவல்களும் விடயங்களும் பொதிந்துள்ளன.

ஆங்கில மொழியில் வெளியாகும் இந்நூலை தமிழில் மொழி பெயர்த்து விரைவாக வெளியிடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுவதாகத் தெரிகின்றது.

# வவுனியா பூனாவைப் பகுதியில் ரயில் மோதி இரு யானைகள் பலி

(நமது நிருபர்)

வவுனியா பூனாவைப் பகுதியில் ஆணும் பெண்ணுமாக ஒரு ஜோடி யானைகள் புதன்கிழமை அதிகாலை ரயிலில் மோதிப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளன. கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி வந்த ரயிலுடனேயே இந்த யானைகள் மோதுண்டன.

இப்பகுதியில் ஏற்கனவே பலமுறை இப்படி யானைகள் ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளன. அண்மைக்காலத்தில் மட்டும் எட்டு யானைகள் இப்படி பலியாகியிருக்கின்றன என்றும் கூறப்பட்டது.

இப்பகுதியில் யானைகள் நடமாடுவதால் ரயில்கள் மெதுவாகப் போகவேண்டும் என்ற அடையாளப் பலகை ரயில் பாதை ஓரத்தில் நடப்பட்டுள்ளது. ஆனால், இத்தகைய விபத்துக்களோ தொடர்கின்றன. வனவளத்துறையினரும், பொலிஸாரும் புதனன்று நடந்த விபத்தில் இறந்த யானைகளின் உடல்களை விசாரணையின் பின் அங்கிருந்து அகற்றினர்.



யுத்தத்திற்கு எதிரான முன்னணியின் அனுசரணையுடன் சகவாழ்விற்கான மன்றம் ஏற்பாடு செய்த ''சமாதானத்திற்கான மாவட்ட மகாநாடு'' அம்பாறை நகர மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் அதிதிகளாகக் கலந்து கொண்ட சகவாழ்விற்கான மன்ற பெண்கள் இணைப்பாளர் திருமதி.ச.கமலராணி அம்பாறை மாவட்ட தமிழர் மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் என்.தர்மலிங்கம் உரையாற்றுவதையும் இதில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் காணலாம்.

(படம்:-க.சரவணன்)

## செய்தித் துளிகள்

### நிருவாகிகள் தெரிவு

(அட்டாளைச்சேனை நிருபர்)

அட்டாளைச்சேனை அரசினர் வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்க நிருவாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவர்:-ஏ.எல்.இப்றாலெப்பை, உபதலைவர்:- ஐ.எல்.தௌபீக், செயலாளர்:- ஐ.எல்.எம்.நஸீர், பொருளாளர்:- எம்.ஜே.எம்.பைறூஸ், உபசெயலாளர்:- ஏ.எல்.எம்.காசீம், நிருவாகக்குழு உறுப்பினர்களாக:- எம்.ஏ.றமீஸ், எஸ்.ரீ.சம்சுதீன், ஏ.எல்.றமீஸ், எம்.ஐ.சிறாஜுதீன், எஸ்.எல்.மீராலெப்பை, எஸ்.எல்.அலிஅக்பர், எம்.ஐ.றமீஸ், கே.எல். அக்பர், எம்.எல்.ஹபீப் முகம்மட், எம்.எல்.சாதீக் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

### ஆலய தீமிதிப்பு வைபவம்

(நமது நிருபர்)

பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ பத்திரகாளியம்பாள் ஆலய வருடாந்த தீமிதிப்பு வைபவம் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறும்.

வருடாந்த மஹோற்சவம் வியாழனன்று 14.10.2004 கடல் தீர்த்தமெடுத்து கதவு திறத்தலுடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 09 நாட்கள் பூசை நடைபெறும். எதிர்வரும் வியாழக்கிழமை 21.10.2004 மாலையில் அம்பாள் முத்துச்சப்ரத்தில் எழுந்தருளி வீதியுலா வரவுள்ளார்.

22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு தீ மூட்டும் நிகழ்வுடன் விசேட பூசையும் நடைபெறுமென ஆலயத் தலைவர் பி.இராமநாதன் தெரிவித்தார்.

### வருடாந்த உற்சவம்

(சரவணன்)

கிழக்கு மாகாண அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்றில் பன்நெடுங்காலம் கோவில் கொண்டு வீற்றிருக்கும். ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவ விழா கடந்த 14.10.2004 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி, தொடர்ந்து 10 நாட்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 23.10.2004 ஆம் திகதி நிறைவு பெறும்.

விழாக்காலங்களில் விசேட பூசைகள் கூட்டுப் பிராத்தனைகள், வீதி ஊர்வலங்கள், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம் பெறும்.

### சிறுவர் தின விழா

(நந்தபாலு)

சர்வதேச சிறுவர் தின விழாவினை 30 ஏக்கர் ''இளம் பூக்கள்'' சிறுவர் கழகத்தின் தலைவர் எல்.சாலினி தலைமையில் தம்பிலுவில் கனகர் நகர் பாடசாலை மண்டபத்தில் 2004.10.09 அன்று சனி பிற்பகல் நடைபெற்றது.

இன்று சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றது. இந்நிகழ்விற்கு ஓய்வு பெற்ற கிராம அதிகாரி எஸ்.இராமலிங்கம், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், ஆசிரியர், சிறுவர் சம்மேளனத் தலைவர் கே.சிவராசா, திட்ட ஊக்குவிப்பாளர், ரி.ஜெயந்தினி, வேள்ட் விஷன் சிறுவர் ஊக்குவிப்பாளர், பி.நந்தபாலு, பெற்றோர்கள், சிறுவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

### தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

(நந்தபாலு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையில் அண்மையில் தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் இளைஞர் சேவைகள் அதிகாரி திருமதி.பிரசாந்தி பிரியதர்ஷன் தலைமையில் பாடசாலையை விட்டு விலகிய இளைஞர், யுவதிகளுக்கான சுயதொழில் வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெற்றது.

# வடக்கு கிழக்கு அபிவிருத்திக்காக அமைச்சர்களிடம் கையேந்துவதற்கு நாம் தயாராக இல்லை

– பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி –



(சி.பி.ஹரிச்சந்திரன், எம் யுவராஜ்)

தமிழர்களுக்கான தன்னாட்சி அதிகார சபை கிடைக்கும் பட்சத்தில் மட்டுமே எமது பிரதேசத்தை முழுமையாக அபிவிருத்தி செய்யலாம். வடக்குக் கிழக்கு அபிவிருத்திக்காக அமைச்சர்களிடம் கையேந்துவதற்கு நாம் தயாராக இல்லை. விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள்தான் தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற கண்ணோட்டத்தோடுதான் அரச அமைப்புக்கள் எம்மை நோக்குகின்றார். எமது மக்களின் தன்மானத்திற்கு பங்கமேற்படும் வகையில் நடந்து கொள்ள நாம் தயாரில்லை என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சித்தாண்டி மாவடி வேம்பு கிராமத்தில் வேள்ட் விசன் (உலக தரிசன நிறுவனம்) நடைமுறைப்படுத்தும் உலக உணவுத் திட்ட உணவுடனான வேலைத்திட்ட செயல்பாட்டில் புனரமைப்புச் செய்யப்பட்ட இரண்டு வீதிகளைத் திறந்து வைத்து உரையாற்றிய போதே இக்கருத்தைத் தெரிவித்தார்.

உலக உணவுத்திட்டப் பணிப்பாளர் ''மைக்'' ஏறாவூர் பற்று உலக தரிசன நிறுவன முகாமையாளர் அருள்நேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் எமது மாவட்டத்திலே பல அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றது. அதில் குறிப்பாக வேள்ட் விசனின் செயற்பாடு மிகவும் பாராட்டத்தக்கது. இந்நிறுவனம் மக்கள் அடிப்படைத் தேவைகளுக்கு முக்கி யத்துவம் கொடுப்பதோடு சிறுவர்களின் நலனும் மிகுந்த அக்கறையோடு செயற்படுகின்றது என்றார்.

# ஆசிரியர் தொழில் மகத்தானது அதனை அவர்கள் புனிதமாக மதிக்க வேண்டும்

சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஐ.எம்.முஸ்தபா

(முபா)

ஆசிரியர் தொழில் மகத்தானது. இதனை ஆசிரியர்கள் புனிதமாக மதிக்க வேண்டும். ஆசிரியர்கள் சிறந்த கற்பித்தல் முறைகளைக் கையாண்டு எதிர்கால சந்ததிகளை முன்னேற்றப் பாதைக்கு கொண்டுவர வேண்டும். நேரம் தவறாமை, அர்ப்பணம், கட்டொழுங்கு போன்ற நல்லவற்றைப் பேணி சேவையாற்ற வேண்டும்.

ஆசிரியர்கள் நாட்டின் முதுகெலும்பு எனச் சொல்லலாம். இவர்களால் உருவாக்கப்பட்டவர்களே இன்று சமூகத்தில் உயர்ந்த நிலையில் காணப்படுகின்றனர். பல இன்னல்களுக்கு மத்தியில் சேவையாற்றும் இவர்களுக்கு ஏனைய நாடுகளைப் போல போதியளவு சம்பளம் வழங்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். இவ்வாறு அட்டாளச்சேனை தேசியக் கல்விக் கல்லூரியில் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஐ.எம். முஸ்தபா குறிப்பிட்டுள்ளார். அட்டாளச்சேனை ஆசிரிய கலாசாலை பயிற்சி ஆசிரியர்கள் கற்பித்தல் பயிற்சியை அட்டாளச்சேனை மத்திய கல்லூரியில் முடித்துக் கொண்ட பின் ஒழுங்கு செய்யப்பட்ட பிரியாவிடை வைபவத்தின் ஜனாப் முஸ்தபா உரையாற்றும் போதே குறிப்பிட்டார். பிரதி அதிபர் எம்.நளீம் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இவ்விழாவில் அதிபர் ஏ.சி.சைபுத்தீன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

# சவளக்கடை நடுக்கண்டவட்டை விவசாயிகளுக்கான கலந்துரையாடல்

(அ.தர்மா)

நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவில் சவளக்கடை கமநல மத்திய சேவைகள் நிலையப் பிரிவுக்குட்பட்ட நடுக்கண்டப் பகுதி விவசாயிகளுக்கு ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளை தீர்ப்பதற்கான சந்திப்பு அண்மையில் இடம் பெற்றது.

பிரதேச செயலாளர் எம். கோபாலரெத்தினம் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற இந்நிகழ்வில் நடுக்கண்டத்தில் நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் எதிர் கொள்ளும் நீர்ப்பாய்ச்சல் பிரச்சினை காரணமாக சுமார் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட வயல் நிலங்கள் கடந்த காலங்களில் செய்கை பண்ண முடியாத நிலை குறித்தும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

விவசாயிகளின் அடிப்படைப் பிரச்சினைகளை கேட்டறிந்த அதிகாரிகள் விரைவில் அதனை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தனர்.

நெக்கோட் திட்டப் பணிப்பாளர் எஸ்.ஏ.கரீம் உதவி பிரதேச செயலாளர் வி.ஜெயதீஸன் விவசாயத் திணைக்கள நியாப் திட்ட அதிகாரிகள் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# சிறுவர் தினப் பேரணியும் கலை நிகழ்ச்சியும்

(நந்தபாலு)

பொத்துவில் ''ஊறணி'' வள்ளுவர் சிறுவர் கழகத்தினர்கள் சர்வதேச சிறுவர் தினத்தினை முன்னிட்டு ஊறனிக் கிராமத்தில் மாபெரும் சிறுவர் பேரணி ஒன்றினை நடாத்தினர். இதில் சிறார்கள், சிறுவர்களை வேலைக்குச் சுமத்தாதீர்கள். பெற்றோர்களே எங்களது கல்விக்கு உதவுங்கள், சிறுவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளியுங்கள், என எழுதப்பட்ட பதாதைகளை ஏந்திய வண்ணமும் ஒவ்வொரு வீதியாகவும் சிறார்கள் சென்றதுடன் பாடசாலை மண்டபத்தில் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும், அதிதிகளின் உரையும் கடந்த 2004.10.09 திகதி காலை சிறுவர் கழகத் தலைவர் ரி.மேகலா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு சிறுவர் ஊக்குவிப்பாளர், பாடசாலை அதிபர், ஆசிரியை, திட்ட ஊக்குவிப்பாளர், சுவாட் உத்தியோகத்தர், விளையாட்டுக்கழக தலைவர், பெற்றோர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# இன்று இலங்கையில் அறுபது வீதமான பெண்கள் இல்லத்து வன்முறைகளால் துன்பப்படுகின்றார்கள்

– சட்டத்தரணி சி.ஜெகநாதன் –

(சரவணன்)

இன்று இலங்கையில் 60 வீதமான பெண்கள் இல்லத்து வன்முறையால் துன்பப்படுகின்றனர். இவ்வன்முறைக்கு பொருளாதாரம் தாம்பத்தியம் உறவில் ஏற்படும் சிக்கல்கள் காரணமாக பெண்கள் மீதான வன்முறைகள் ஏற்படுகின்றது. இவ்வாறு அண்மையில் அக்கரைப்பற்று வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெற்ற ''பெண்கள் மீதான வன்முறைகளை ஒளிப்போம்'' எனும் கருத்தரங்கில் கலந்து கொண்ட சட்டத்தரணி சி.ஜெகநாதன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:- 2003ம் ஆண்டு இலங்கையில் 2155 பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் பொலிசில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் 690 உடல் ரீதியாகத் துன்புறுத்தல் சம்பவங்களும் 1006 பெண்கள் மீது பாலியல் துஷ்பிரயோகங்களும் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன என புள் ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் இந்தப் புள்ளி விபரங்கள் அரசகட்டுப்பாடு இல்லாத வடக்குக் கிழக்குப் பிரதேசங்கள் உள்ளடக்கப்படவில்லை.

இந்நிகழ்வில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளர் மனோகரன், ஒஸ்போம் ஜீ.பி நிறுவனத்தின் இலங்கைப் பிரச்சாரத் திட்ட அதிகாரி சுமங்கலி அக்கரைப்பற்று பொலிஸ் பெண் அதிகாரிகள் ஆகியோர் உரையாற்றினார்கள். இதில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள் மற்றும் பெண்கள் அமைப்புக்கள் கலந்து கொண்டன.

# பொருட்களின் விலை அதிகரிப்பு, மக்கள் புகார் தெரிவிப்பு

(மருதமுனை நிருபர்)

சதொச நிடைல் லிமிட்டட் கிளைகளில் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். முஸ்லிம் மக்களின் புனித நோம்பை முன்னிட்டு பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், பாவனையாளர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

சீனி, 01 கிலோ39.00ரூபாவாகவும், பருப்பு01 கிலோ 76.00 ரூபாவாகவும், தரம் குறைந்த பேரீச்சம் பழம் 01கிலோ 72.00 ரூபாவாகவும் மேலும் பல பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது. சதொசாவின் 40வீத பங்கை தனியாருக்கு விற்றதன் மூலமே இந்த நிலை ஏற்பட்டு விட்டுள்ளது. முன்பு சதொச நோம்பு காலங்களில் பொருட்களின் விலைகளை குறைத்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் சமாதான அமைப்பின் விளையாட்டு விழா

(அ.தர்மா)

கல்முனை சமாதான அமைப்பின் நற்பிட்டிமுனை சேனைக்குடியிருக்கு கிராமமட்ட ஆலோசனைக் குழு நடாத்தும் பாலர் பாடசாலை மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா நற்பிட்டி முனை நகவிதா கலையரங்கில் சென்ற 2004.10.12ம் திகதி புதன கிழமை நடைபெற்றது.

நற்பிட்டி முனை, சேனைக் குடியிருப்பு கிராமமட்ட ஆலோசனைக்குழுத் தலைவர் ஜனாப் எஸ்.எல். ஜமால்தீன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக கல்முனை கூட்டுறவுப் பரிசோதகர் திரு.என்.நல்லரெத்தினம்,இலங்கை கனிய வளக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் ஜனாப் ஏ.எம்.தாஜுர், ஆகியோரும், கௌரவ அதிதிகளாக ஜனாப் எச். எம்.எம்.நசீர், திரு.கே.மகேந்திரராசா, கே.லோகநாதன் ஆகியோரும், விசேட அதிதிகளாக கல்முனை மின்சார சபை மின் அத்தியட்சகர் எஸ்.பிரேமதாசா,ஜனாப் எம்.ஐ.ஏ.கையூம், பொறியியல் உதவியாளர் எஸ்.தற்பரன், எம்.எம்.றியாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சுமார் ஐந்நூறுக்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம் பொது மக்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

# மாவடிவேம்பில் வேள்ட் விசன் நிறுவனம் இரு புதிய வீதிகள் திறந்து வைப்பு

(எம்.யுவராஜ்)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் வேள்ட் விசன் நிறுவனத்தினால் ஏறாவூர் பற்று பிராந்திய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாவடி வேம்பு கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரு வீதிகள் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

''உணவுக்காக வேலைத்திட்டம்'' என்ற அடிப்படையில் கிராமத்திலுள்ள பொது மக்களின் உதவியோடு நிர்மாணிக்கப்பட்ட இவ்வீதிகளை வேள்ட் விசன் நிறுவன அதிகாரிகளான ஜெயவீர, அன்பு சுந்தர்சிங்க, மைக்கல் கொன் மற்றும் ஏறாவூர்பற்று பிரதேச உதவித்திட்ட முகாமையாளர், அருள்நேசன் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி, ஏறாவூர் பற்று பிரதேச செயலக உதவித்திட்டமிடல் அலுவலகர் சந்திரகலா பிரணவஜோதி, பிரதேச சபை செயலாளர் திருமதி. அரு ட்பிரகாசம் மற்றும் வேள்ட் விசன் நிறுவனப் பிரதிநிதிகள் ஆகி யோர் கலந்து கொண்டு வீதியினைத் திறந்து வைத்தனர். அதிதிகள் கிராம மக்களால் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர் பின்னர் மாவடி வேம்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் மாவடிவேம்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அதிதிகள் பலர் உரையாற்றினர்.






உலக உணவுத் திட்டத்தின் கீழ் வேள்ட் விசன் நிறுவனத்தின் ஏறாவூர் பிரதேச செயலகப் பிரிவில் நடைமுறைப் படுத்திவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் மட்டக்களப்பு வேள்ட் விசன் போக்கஸ் மண்டபத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஏறாவூர் பற்று உதவித்திட்ட முகாமையாளர் எஸ். அருள்நேசன் மங்கள விளக்கேற்றுவதையும், தகவல் பரிமாற்ற உத்தியோகத்தர் ஜெயரவி, ஏறாவூர் பற்று பிரதேசசபைச் செயலாளர் திருமதி அருட்பிரகாசம் உரையாற்றுவதையும் மற்றும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்களையும் படத்தில் காணலாம்.

(படமும் தகவலும்:-இ. வரதராஜன்)

# மீனவர்கள் வலையில் திமிங்கிலம்; இறந்ததால் மண்ணில் புதைப்பு

கொட்டிவாக்கம் மீனவர்கள் வலையில் பிடிப்பட்ட திமிங்கிலம் இறந்து விட்டதால் கடற்கரை ஓரத்திலேயே புதைக்கப்பட்டது.

சென்னை திருவான்மியூரை அடுத்து கொட்டிவாக்கம் கடற்கரையில் நேற்று முன்தினம் காலை ஆறு மணிக்கு மீனவர்கள் வழக்கம் போல் மீன் பிடிக்கவந்தனர். சேஷன் என்பவருக்கு சொந்தமான பைபர் படகில் நாற்பது மீனவர்கள் கடலுக்குள் பெரிய வலையுடன் சென்றனர். கரையிலிருந்து மூன்று கி. மீ. , தூரத்தில் உள்ள கடலுக்குள் வலையை வீசி விட்டு கரைக்குத் திரும்பினர். கரையில் நின்று கொண்டு நாற்பது மீனவர்களும் வலைகளை அங்குமிங்குமாக இழுத்துக் கொண்டிருந்தனர். எட்டு மணிக்கு வலையில் திடீரென்று கனம் அதிகரித்தது. வலையை பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் நிலை தடுமாறினர். தங்கள் வலையில் பெரிய சுறா மீன் சிக்கிவிட்டது என்று அவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். சுறா மீன் கிடைத்தால் நல்ல விலைக்கு விற்கலாம் என்று மீனவர்கள் வியாபார கணக்குப் போட்டனர். இதனால் எடை அதிகமான அந்த வலையை மீண்டும் கட லுக்குள் மூழ்க விடாமல் விடாதே பிடி என்று கூறியபடி கரைக்கு மூச்சிரைக்க மீனவர்கள் இழுத்தனர்.



நாற்பது மீனவர்கள் இழுத்தும் கரைக்கு வலை வந்து சேர முடியாத நிலை ஏற்பட்டது. உடனே கொட்டிவாக்கம் குப்பம் வடக்குப் பகுதியைச் சேர்ந்த நூறு மீனவர்கள் ஓடிவந்து வலையை இழுக்கவும் ஒரு வழியாக கரைக்கு வலை வந்து சேர்ந்தது. வலை சுக்கு நூறாக கிழிந்திருந்தது. வலையில் சிக்கியிருந்த மீன் சுறா அல்ல. திமிங்கிலம் வகையை சார்ந்கித வழுவம் என்ற மீன் என்று தெரியவந்ததும் மீனவர்கள் சோகம் அடைந்தனர். காயத்துடன் காணப்பட்ட அந்த மீனை மீண்டும் கடலுக்குள் தள்ளுவதற்கு திருவான்மியூர் இன்ஸ்பெக்டர் தெய்வசிகா மணி, நீலாங்கரை இன்ஸ்பெக்டர் மோகன் மற்றும் பொலிசார், மீனவர்கள் ஆகியோர் முயற்சித்தனர். மீனவர்கள் கடல் நீரை கொண்டு வந்து மீன் மீது ஊற்றினர். மீன் உடலில் கயிறு கட்டி கடலுக்குள் தள்ள முயற்சித்த போது திமிங்கிலம் இறந்துவிட்டது.

தகவலறிந்து புளுகிராஸ் அமைப்பைச் சேர்ந்த ஆம்புலன்ஸ் சம்பவ இடத்திற்கு வந்தது. அந்த அமைப்பின் ஊழியர்களும் மீனை காப்பாற்ற முயற்சித்தும் பலன் கிடைக்கவில்லை. இதற்கிடையில், காஞ்சிபுரம் மாவட்ட மீன் வளர்ச்சித் துறை உதவி இயக்குனர் லலிதா, நீலாங்கரை மீன் வளர்ச்சி துறை ஆய்வாளர் சின்ன குப்பன், பூபாலன் உள்ளிட்ட அதிகாரிகள் கடற்கரைக்கு விரைந்து வந்தனர். இறந்து கிடந்த மீனை சோதனையிட்டனர். அதில், திமிங்கிலத்தின் நீளம் 17 அடி, இறக்கையுடன் அகலம் எட்டு அடி என்று தெரியவந்தது. இறந்த மீனை கடலுக்குள் போட்டால் மீண்டும் அலைகளில் சிக்கி கரைக்கு வந்து விடும். மேலும், துர்நாற்றம் வீசும் என்பதால் கடலுக்குள் மீனை தள்ளி விடுவதை மீன் வளர்ச்சித்துறை அதிகாரிகள் விரும்பவில்லை. கரையில் குழி தோண்டி புதைக்க முடிவு செய்தனர். அதற்கு அப்பகுதி மீனவர்களும் சம்மதம் தெரிவித்தனர். இதையடுத்து, மாலையில் பெரிய குழி தோண்டி திமிங்கிலம் புதைக்கப்பட்டது.

திமிங்கலம் பார்க்க வசூல் வேட்டை

கொட்டிவாக்கம் கடற்கரையில் திமிங்கிலம் பிடிப்பட்டுள்ளது என்ற செய்தி திருவான்மியூர் திருவள்ளுவர் நகர், கொட்டிவாக்கம், லட்சுமண பெருமாள் நகர் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் ஆர்வத்துடன் கடற்கரைக்கு படையெடுத்தனர். அப்போது அப்பகுதியைச் சேர்ந்த வெட்டிக்கும்பல் ஒன்று திமிங்கிலத்தை பார்க்க தலைக்கு இரண்டு, மூன்று ரூபாய் வசூல் வேட்டை நடத்தியுள்ளது. நூற்றுக்கும் மேற்பட்டவர்களிடம் இந்த வசூல் வேட்டை நடந்த விவகாரம் நீலாங்கரை போலீசாருக்கு தெரியவந்ததும் பொலிஸ் பட்டாளம் கடற்கரைக்கு வந்ததும் அந்த கும்பல் அங்கிருந்து கலைந்து சென்றுள்ளது. கடற்கரை எதிரே அமைந்துள்ள கெஸ்ட் ரூஅவுஸ் ஒன்றில் தொலைக்காட்சி நாடகப் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. அதில், நடிக்க வந்த நடிகர், நடிகைகள் மற்றும் கடற்கரையில் சென்றவர்கள் திமிங்கிலைத்தை ஆவலுடன் வந்து பார்த்துச் சென்றனர்.

# நாம் நறுமணங்களை உணர்வது எப்படி?

நறுமணங்களை உணரும் சக்தியை நாம் பெரும்பாலும் யோசித்துக் கூட பார்த்திருக்க மாட்டோம். ஆனால், நறுமண த்தை உணரும் சக்தியை இழப்பது ஒரு தீவிர குறைபாடு தான் என்கிறார்கள். இதைப் பற்றி ஆய்வு செய்து தற்போது நோபல் பரிசு பெற்றுள்ள ரிச்சர்ட்ஆக்ஸல் மற்றும் லிண்டா பக்.

நமது நறுமண மண்டலம் எப்படி வேலை செய்கிறது என்பதனை இவர்களது ஆய்வு தெளிவுபடுத்தியுள்ளது. இத்துறையின் ஆய்வில் இவர்களது பணி முன்னோடிகளில் ஒன்றாகத் திகழ்கிறது. இவர்கள் சுமார் ஆயிரம் வேறுபட்ட ஜீன்கள் இணைந்த ஒரு ஜீன் குடும்பத்தைக் கண்டுபிடித்துள்ளனர். இந்த ஜீன்களிலிருந்து நறுமண ரிசப்டார்கள் அதாவது நறுமண மூலக்கூறுகளை கடத்த உதவும் நரம்புகள் போன்வை உருவாகின்றன. நறுமண ரிசப்டார் செல்களில் இந்த ரிசப் டார்கள் அமைந்துள்ளன. இந்த ரிசப்டார்கள் மூக்கின் எபிதெலியத்தின் மேல் பகுதியின் ஒரு சிறு பகுதியில் காணப்படும். இவை தான் உள்ளிழுக்கப்படும் நறுமண மூலக் கூறுகளை கண்டுபிடிக்கின்றன. இதன் மூலம், கிட்டத்தட்ட 10 ஆயிரம் வேறுபட்ட நறுமணங்களை உணர முடியும் என்கிறார் ரிச்சர்ட் ஆக்ஸல்.

இத்தனை நறுமணங்களை ஞாபகத்தில் வைத்திருக்கும் நம் நறுமண மண்டலத்தில் உள்ள ஒவ்வொரு நறுமண ரிசப்டார் செல்லிலும் ஒரு வகையான நறுமண



ரிசப் டார் தான் உள்ளது. ஒவ்வொரு ரிசப்டாரும் ஒருசில குறிப்பிட்ட நறுமணத்தை மட்டுமே உணர்கின்றன.

நறுமணத்தை உணர்ந்தவுடன் இந்தச் செல்கள் ஆல்பாக்டரி பல்பில் உள்ள குளோ மருலைக்கு மெல்லிய நரம்பு வழியாக அனுப்புகிறது. மூளையில் உள்ள முதன்மையான நறுமணப் பகுதிதான் ஆல்பாக்டரி பல்பு. ஒரே ரிசப்டார் செல்லிலிருந்து வரும் ஒரே வகையான ரிசப்டார்கள், அதன் நரம்புகளை அதே குளோமருலஸிற்குத்தான் அனுப்புகின்றன.

இந்த ஆல்பாக்டரி பல்பிலிருந்து தகவல் மூளையில் பிற பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அங்கு பல நறுமண ரிசப்டார்களிலிருந்து வரும் தகவல்கள் இணைத்து ஒரு அமைப்பு உருவாக்கப்படுகிறது. அப்பொழுது நம்மால் நறுமணத்தை உணர முடிகிறது.

**செவ்வாய்:-**

- சூரியனில் இருந்து 228 மில்லியன் கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ளது.
- சூரியனை சுற்றி வர 687 நாட்கள் எடுக்கின்றது. தன்னைத் தானே சுற்றி வர 24 மணித்தியாலம் 6 நிமிடங்களும் எடுக்கின்றது.
- 2 துணைக் கோள்கள் உள்ளன.

**பூமி:-**

- சூரியனில் இருந்து 150 மில்லியன் கிலோ மீற்றர்களுக்கு அப்பால் உள்ளது.
- சூரியனை சுற்றி வர 365 நாட்கள் எடுக்கின்றது. தன்னைத் தானே சுற்றி வர 24 மணித்தியாலம் எடுக்கிறது.
- 1 துணைக் கோள் உள்ளது.




## ஐயங்கள் ஆயிரம்:-

## சிரிப்பு வருது மனிதன் சிரிப்பது எதனால்?

சிரிப்பு என்பது உள்ளத்தில் எழும் பல உணர்ச்சிகளின் வெளிப்பாடு ஆகும். சிலர் மெதுவாக சிரிப்பார்கள். பலர் வாய்விட்டு ஆரவாரமாக சிரிப்பார்கள். மனிதன் ஏன் சிரிக்கிறான்? சிரிப்பதனால் உடலில் என்ன மாற்றங்கள் ஏற்படுகின்றது என்பது குறித்து உளவியல் நிபுணர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

ஒருவர் சிரிக்கும் போது அவர் எதிரில் உள்ள மற்றவர்களின் முகத்தில் தோன்றும் மாறுதல்களும், நம்மை சிரிக்க வைக்கின்றன.

இயற்கைக்கு முரணான செயல்களைப் பார்க்கும் போது திடீரென உண்டாகும் உணர்ச்சி வெளிப்பாடே சிரிப்பு என்று வேறு சிலர் விளக்கியுள்ளனர்.



பிற எந்த விலங்குகளிடம் இல்லாமல் மனிதனிடம் அமைந்துள்ள சிரிப்பு அவனது தனி சிறப்பியல்பாகும். வாய்விட்டு நன்றாக சிரித்தால் நுரையீரல்கள் நன்கு விரிந்து செயல்படும். உள்ளே அடைந்து கிடக்கும் சக்தியை உடனே வெளிப்படுத்துவதற்கு சிரிப்பு ஒன்றே முக்கிய சாதனமாகும். வாய்விட்டு சிரித்தால் முகத்தில் உள்ள தசைகளும், நரம்புகளும் புத்துணர்ச்சி பெற்று முகம் பொலிவு பெறும்.

## மார்பகப் புற்று நோய் விழிப்புணர்வு மாதம்

ஆண்டுதோறும் அக்டோபர் முழுவதும் மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மாதமாக கடைபிடிக்கப்படுகிறது.

நோய்கள் ஏழை, பணக்காரர், படித்தவர், படிக்காதவர் என்ற வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் வருகிறது. ஆனால் நோய்களின் விழிப்புணர்வைப் பெற்றுக்கொள்வதன் மூலம் நோய் வராமல் காத்துக் கொள்ள முடியும். ஒரு வேளை அதையும் தாண்டி வந்துவிட்டால், அதிலிருந்து மீள்வதும் நம்மை பாதுகாத்துக் கொள்வதும் எளிது. அமெரிக்கன் கேன்சர் 40 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மேம்மோகிராம் தொடர்ச்சியாக செய்து கொள்வதன் மூலம் வருமுன் காத்துக் கொள்ளமுடியும்.


இந்தத் தளத்தில் இது தொடர்பாக வித்தியாசமான முறையில் . விழிப்புணர்வு பிரசாரங்கள் இடம்பெற்றுள்ளன.

இணையத்தள முகவரிகளை இத் தளத்தில் தந்துவிட்டால், ஒவ்வொரு ஆண்டும் மேம்மோகிராம் செய்யக்கூடிய நாட்களை இது உங்களுக்கு ஞாபகப்படுத்தும்.

குடும்பத்தில் யாருக்காவது புற்றுநோய் இருந்திருந்தால் அந்தப் புற்றுநோய் பிள்ளைகளுக்கு வராமல் காத்துக்கொள்ளக்கூடிய ஜீன் சிகிச்சை குறித்த தகவலும் இத்தளத்தில் உள்ளது.

மார்பக புற்றுநோய்க்கு என பிரத்தியேக தளம் செயல்படுகிறது: மார்பகப் புற்றுநோய் குறித்த கேள்விகள், சிகிச்சை முறைகள், அறிகுறிகள், இத்துறையில் நடைபெற்று வரும் ஆய்வுகள் என்று ஏராளமான தகவல்களை இத்தளம் கொண்டுள்ளது. இந்தியாவிலும் இதுபோன்று மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் தளங்கள் தேவைப்படுகின்றன.

# ஈராக் பலூஜா நகர் மீது அமெரிக்கப் படை தாக்குதல்



(பக்தாத்)

ஈராக்கில் சன நெரிசல் மிக நிறைந்த ஒரு நகரத்தில் அமெரிக்கக் கூட்டுப் படையினர் தீவிரமான தாக்குதல்களை நடாத்தியிருப்பதாக தெரிகிறது. மேற்கு பக்தாத்தில் இருந்து 40 மைல்கள் தொலைவிலுள்ள இடத்தில் நடைபெற்றுள்ள மேற்படி தாக்குதலில் அமெரிக்கப் படையினரின் கவச வாகனங்கள், எறிகணைகள் பாரிய சண்டைக் கப்பல்கள் உள்ளிட்ட அதி கூடிய இராணுவத் தளபாடங்கள் மிகத் தாராளமாகப் பாவிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

சென்ற வாரம் ஆரம்பிக்கப்பட்ட ஒரு வார காலத் தாக்குதல்" என்னும் புதிய இராணுவ நடவடிக்கையின் இரண்டாம் கட்டமாக அல்-சக்குவாய் தீவிரவாதிகளின் கோட்டையென வர்ணிக்கப்படும் ஓர் இடத்தையும் அல் சக்குவாய் வலைப்பின்னல் கேந்திர நிலையத்தையும் நோக்கிய தாக்குதல் பெரு வெற்றியுடன் நிறைவேறியிருப்பதாகவும் அமெரிக்கப் படையின் கடற்படை வேகப்பிரிவின் முதலாவது லெப்டினன்ட், லயல் கில்பேட் அவர்கள் இது பற்றி சி.என்.என் தொலைக்காட்சி நிறுவனத்துக்குக் கூறுகையில்

நீண்ட ஒரு இரவு வரைக்கும் இத்தாக்குதல் இருக்கும் என குறிப்பிட்டிருக்கிறார். மேலும் இந்தக் கடற்படைப் பிரிவின் மற்றுமொரு அதிகாரி மேஜர் பிரான்சிஸ் பெக்கோலி அவர்கள் ஏ.பி. செய்தி ஸ்தாபனத்திற்கு வழங்கிய செவ்வியில்

இரண்டு கடற்படை வேக பணிப் பிரிவுகள் தற்போது சண்டையில் ஈடுத்தப்பட்டுள்ளதாகவும் வான் படையின் உதவியுடன் மேற்படி இரண்டு பெட்டாலியன்களும் முன்னேறி வருவதாகவும் தெரிவித்திருக்கின்றார். இந்தத் தாக்குதல்களின் நோக்கம் என்னவென்று கேட்கப்பட்ட போது இது ஈராக் எதிர்ப்புக் குழுக்களின் தீவிர சக்தியைத் தடை செய்வதுதான் நோக்கம் எனக் குறிப்பிட்டார்.

மேலும் இவர் தெரிவிக்கையில் இத்தகைய அதிரடித் தாக்குதல்களினால் ஈராக் நாட்டின் ஜனநாயக விழுமியங்களை இடைக்கால அரசு பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே குறிக்கோள் என்றும் குறிப்பிட்டுள்ளதாக செய்தி தெரிவிக்கின்றது.

இதே வேளை மேற்படித் தாக்குதலில் 5 சிலிவியன்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் 16 பேர் வரை காயப்பட்டுள்ளதாகவும் பலூஜா பொது வைத்தியசாலை நிர்வாகி தெரிவித்துள்ளார்.

ஆனால் பொதுமக்கள் சார்பில் பேசவல்ல ஒருவர் தகவல் தருகையில் ஒலிபெருக்கியில் முதலில் அறிவிப்புச் செய்தார்கள். தீவிரவாதிகள் தங்களது ஆயுதங்களைக் கீழே போட வேண்டும். சரணடைய வேண்டும். எனப் பேசினார்கள் சிறிது நேரத்தில் பல இடங்களில் ஒரே நேரத்தில். தாக்குதல்களை ஆரம்பித்தார்கள். இதில் ரொக்கெற்றுக்கள், ஆட்டிலெறி மற்றும் பாரிய டாங்கிகள் என்பனவற்றைத் தாராளமாய்ப் பாவித்தார்கள். என்று கூறியிருந்தார்.

இதே வேளை பிரதமர் அலாவி அவர்கள் நேற்று முன்தினம் தீவிரவாதிகளுக்கு விடுத்திருக்கும் எச்சரிக்கைக்குப் பதிலளித்துப் பேசிய பலூஜா மதவாதத் தலைவர் அபூ அசாட் ஆயுதக் கையளிப்பு என்பது நடக்காத ஒரு காரியம் என்று சூழுரைத்திருக்கின்றார்.

# உலக செய்திகள்

## மீண்டும் பாகிஸ்தான் இராணுவத் தளபதியாக அதிபர் முஷாரப்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அதிபர் முஷாரப், இராணுவ தலைமை தளபதி பதவியில் தொடர்ந்து நீடிக்க அந்நாட்டு பாராளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

பாகிஸ்தான் இராணுவ தலைமை தளபதியாக இருந்த முஷாரப், கடந்த 1999ம் ஆண்டு இராணுவ புரட்சி மூலம் ஆட்சியை கைப்பற்றினார். தொடர்ந்து பாகிஸ்தான் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார். இருப்பினும், இராணுவ தலைமை தளபதி பதவியில் தொடர்ந்தார். ஆனால், இந்த ஆண்டு இறுதிக்குள், இராணுவ தலைமை தளபதி பொறுப்பை விட்டு விலகி விடுவதாக கூறியிருந்தார்.

ஆனால், அடுத்த சில நாட்களிலேயே பல்டியடித்த முஷாரப், நாட்டின் பாதுகாப்பு கருதி இராணுவ தளபதி பதவியில் தொடரப் போவதாக அறிவித்தார்.

இந்நிலையில், அவர் இரு பதவியையும் தொடர்ந்து வகிக்க அந்நாட்டு பாராளுமன்றம் அனுமதியளித்துள்ளது. இதுதொடர்பான மசோதா நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்டுள்ளது. 342 எம்.பி.க்களை கொண்ட பாராளுமன்றத்தில் கீழ் சபையில் மசோதாதாக்கல் செய்யப்பட்டது.

ஆளும் கட்சிக்கு போதிய பெரும்பான்மை இருப்பதால் எந்த வித பிரச்சினையும் இன்றி மசோதா நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதா இனிமேல் மேலவையில் கொண்டுவரப்பட்டு பின்னர் அதிபர் முஷாரப்பின் கையெழுத்துக்கு அனுப்பப்படும். பின்னர் சட்டமாகும்.

## ஆப்கான் வாக்கு என்ணிக்கை தாமதம்

(காபூல்)

ஆப்கானிஸ்தான் அதிபர் தேர்தல் வாக்கு எண்ணிக்கையை தொடக்குவது மேலும் பல நாட்கள் தாமதமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் முதல் முறையாக கடந்த சனிக்கிழமை ஜனநாயக முறைப்படி அதிபர் தேர்தல் நடந்தது. தற்போதைய அதிபர் ஹமீத் கர்சாய் உட்பட 18 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். தேர்தலில் அதிகளவில் முறைகேடு நடந்ததாக குற்றம் சாட்டி, கர்சாய் தவிர மற்ற வேட்பாளர்கள் அனைவரும் தேர்தலை புறக்கணித்தனர்.

## ரஷ்ய விண்கலம் சோயூஸ் மூன்று வீரர்களுடன் விண்ணில் பயணம்


(பைகானூர்)


மூன்று விண்வெளி வீரர்களுடன் ரஷ்ய லசோயூஸ் விண்கலம் நேற்று முன்தினம் விண்ணில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது. அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், அவுஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகள் ஒன்றிணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தை அமைத்துள்ளன. ரஷ்ய மற்றும் அமெரிக்க வீரர்கள் இந்த விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் பல மாதங்களாக தங்கியிருந்து ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள், பிராண வாயு இன்னும் அத்தியாவசியப் பொருட்களை அமெரிக்காவும், ரஷ்யாவும் அனுப்பி வருகின்றன. மூன்று மாதம் அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அங்குள்ள வீரர்கள் பூமிக்கு அழைத்து வரப்பட்டு அவர்களுக்கு பதில் மற்றவர்களை விண்கலங்கள் சுமந்து சென்று விட்டு விட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு கொலம்பியா விண்கலம் விபத்துக்குள்ளான பிறகு, விண்கலத்தில் விண்வெளி வீரர்களை அனுப்புவதை அமெரிக்கா நிறுத்தி வைத்துள்ளது. இதன் காரணமாக ரஷ்ய தரப்பில் சோயூஸ் விண்கலம் விண்ணுக்கு சென்று வருகிறது.


கஜகஸ்தானில் உள்ள பைகானூர் ஏவுதளத்திலிருந்து நேற்று முன்தினம் சோயூஸ் டிஎம் ஏரு5 வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது. கடந்த 9ம் திகதியே சோயூஸ் விண்ணில் செலுத்தப்பட இருந்தது. தொழில் நுட்பக் கோளாறு காரணமாக விண்ணில் செலுத்துவது தாமதமானது.





ஆப்கனில் விதவை பெண்கள் தங்களுக்கான ரேசன் பொருளை வாங்கிட வரிசையில் நிற்கின்றனர்

## கடைசி முறையாக புஷ் – கெரி ஒரே மேடையில் காரசார விவாதம்



(வொஷிங்டன்)

அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும், அதிபர் புஷ்ஷும், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் கெர்ரியும் நேற்று முன்தினம் கடைசி முறையாக ஒரே மேடையில் தோன்றி காரசாரமாக விவாதித்தனர். ஈராக் போர் நாட்டை பலவீனப் படுத்தி விட்டதாக, கெரி குற்றஞ் சாட்டினார். நாட்டை அச்சுறுத்தும் தீவிரவாதத்தை எளிமையாக எடுத்துக் கொள்ளக் கூடாது, என்று புஷ் பதிலடி கொடுத்தார்.

அமெரிக்காவில் அடுத்த மாதம் 2ம் தேதி அதிபர் தேர்தல் நடைபெறுகிறது. இதில், ஆளும் குடியரசுக் கட்சி சார்பில் அதிபர் புஷ் மீண்டும் போட்டியிடுகிறார். ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோன் கெரி களமிறங்கியுள்ளார். இருவரும் தீவிர பிரசாரத்தில் இறங்கியுள்ளனர். ஏற்கனவே இருவரும் இரண்டுமுறை ஒரே மேடையில் தோன்றி விவாதித்தனர். நேற்று முன்தினம் மூன்றாவதாகவும், கடைசியாகவும் ஒரே மேடையில் இருவரும் காரசாரமாக விவாதித்தனர். டேம்பேயில் உள்ள அரிசோனா மாநில பல்கலைக்கழக ஆடிட்டோரியத்தில் இந்த விவாதம் நடந்தது.பேசிய விவரங்கள் வருமாறு:

கெரி: ஈராக் மீது போர் தொடுத்ததால், அமெரிக்கா பல பிரச்சினைகளை சந்தித்து வருகிறது. மற்ற நாடுகளிடம் இருந்து சரியான ஆதரவை பெறவில்லை. இதனால், அமெரிக்காவுக்கு பெரிய சுமை ஏற்பட்டு விட்டது. நாடே பலவீனமாகி விட்டது. ஆப்கான் போரின் போதும் இது தான் நடந்தது.

புஷ்: தீவிரவாதத்தை எளிதாக எடுத்துக் கொள்கிறார் கெர்ரி. தீவிரவாதத்திற்கு அமெரிக்கா கொடுத்துள்ள விலை மிக அதிகமானது. இதனை உணர வேண்டும். நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வது தலைமையின் முக்கிய பணி.

கெரி: செப்டம்பர் 11 தாக்குதலுக்கு பிறகு நாடு முழுவதும் ஆங்காங்கே தீவிரவாத சம்பவங்கள் நடந்த வண்ணம் உள்ளன. துப்பாக்கி ஏந்திய ஆசாமிகளுடன் நடுரோட்டில் பொலிசார் சண்டையிட்டனர். அமெரிக்காவில் உள்ள துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களுக்கு போதிய பாதுகாப்பு அளித்திருக்க வேண்டும். நாட்டின் பாதுகாப்புக்கு மேலும் முக்கியத்துவம் அளித்து என்னால் பணியாற்ற முடியும். தீவிரவாதத்திற்கு எதிரான போரை திறம்பட நடத்த முடியும் அமெரிக்க கூட்ட ணியை வலுவாக்க முடியும்.


புஷ்: நாடு பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றால் தாக்குதல் என்பது தேவையான ஒன்று.

கெரி: அமெக்காவில் உள்ள வேலைகள் இந்தியா, சீனா போன்ற வெளி நாடுகளில் உள்ள கால்சென்டர்கள் போன்றவை மூலம் நிறைவேற்றப்படுவதால், உள்ளூர் தொழிலாளர்கள் வேலை இழக்கின்றனர். இவ்வாறு இருவரும் விவாதித்தனர்.

# கும்ளேயின் சுழல் பந்து வீச்சில் சுருண்டது ஆஸி அணி

(சென்னை)

சென்னை, சேப்பாக்கம் மைதானத்தின் ''ராசி'' மீண்டும் ஒரு முறை இந்தியாவுக்கு கை



கொடுக்கிறது. அனில் கும்ளே அடுத்தடுத்து, வரிசையாக ஏழு விக்கெட் அள்ள. . . 235 ஓட்டங்களில் சுருண்டது அவுஸ்ரேலியா. நான்கு போட்டிகள் கொண்ட இந்தியா, அவுஸ்ரேலியா டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி சென்னை, சேப்பாக்கத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. இந்திய அணியில் ஆகாஷ் சோப்ராவுக்குப் பதில் முகமது கைப் இடம் பிடித்தார். பெங்களூரில் வென்ற ஆஸி. , அணியில் மாற்றம் இல்லை. இங்கும் நாணயற் சுழற்சியில் ஜெயித்து துடுப்பெடுத்தாட தேர்வு செய்தார் ஆஸி. , அணித்தலைவர் ஆடம் கில்கிறிஸ்ட்.

ஜஸ்டின் லாங்கர், மேத்யூ ஹைடன் ஜோடி மீண்டும் ஒரு பிரமாத தொடக்கம் அளித்தனர். உணவு இடைவேளையின் போது ஆஸி. , ஓட்ட எண்ணிக்கை விக்கெட் இழப்பின்றி 111. இந்திய பந்து வீச்சாளர்களைச் சுலபமாகக் கையாண்ட ஹைடன் ரு லாங்கர், முதல் விக்கெட்டுக்கு 136 ஓட்டங்கள் சேர்த்தனர். இருவரும் அரைச்சதம் பூர்த்தி செய்தபிறகு, ஹர்பஜனின் ஒரே ஓவரின், அடுத்தடுத்த மூன்று பந்துகளில், வரிசையாக வெளியேறினர்.

அடுத்து சைமன் கேடிச் ரூடேமியன் மார்ட்டின் மூன்றாவது விக்கெட்டுக்கு 53 ஓட்டங்கள் சேர்த்தனர். மார்ட்டின் 26 ஓட்டங்களில், அனில் கும்ளேவுக்கு விக்கெட் கணக்கைத் தொடங்கி வைத்தார். தேநீர் இடைவேளையின் போது ஆஸி. . 3 விக்கெட்டுக்கு 189 ஓட்டங்கள் எடுத்திருந்தது. மீண்டும் களமிறங்கிய போது, வித்தியாசமான ''விஸ்வரூப'' அனில் கும்ளேவை சேப்பாக்கம் அரங்கம் சந்தித்தது.

சொந்த ஊர், பெங்களூரில் சமீபத்தில் 400 விக்கெட் சாதனை செய்த கும்ளே, நேற்று முன்தினம் பந்துக்குப் பந்து விக்கெட் அள்ளினார். தேநீர் இடைவேளைக்குப் பிறகு அவர் வீசிய ஓவர் எல்லாம் விக்கெட்தான். அவர் சுழலில் நிலைகுலைந்து வெளியேறியது அவுஸ்ரேலியா ஒரு கட்டத்தில், விக்கெட் இழப்பின்றி 136 ஓட்டங்களில் இருந்த ஆஸி. , மேலும் 99 ஓட்டங்கள் சேர்த்து, 235 ஓட்டங்களில் ஆல்ரு அவுட் ஆனது என்றால். . . நம்பமுடிகிறதா? நம்பித்தான் தீரவேண்டும்.

அந்த அணியின் கடைசி 8 விக்கெட்டுகள் வெறும் 46 ஓட்டங்களுக்குள் வெளியேறினர்.






# இந்திய ஆஸி அணி வீரர்கள் அஞ்சலி


(சென்னை)

''கிரிக்கெட் பிதாமகர்'' டான் பிராட்மேன் தலைமையிலான அவுஸ்ரேலிய அணியில் விளை



யாடிய ஆலரு, ரவுண்டர் கீத் மில்லர், கடந்த திங்களன்று மெல்போர்ன் நகரில் காலமானார். சென்னை டெஸ்ட் நேற்றுத் தொடங்கும் முன்னதாக, மைதானத்தில் இந்தியா, அவுஸ்ரேலியா இரு அணி வீரர்களும் இவரது மறைவுக்கு ஒரு நிமிடநேரம் மவுன அஞ்சலி செலுத்தினர். மில்லருக்கு மரியாதை செலுத்தும் விதமாக, அவுஸ்ரேலிய வீரர்கள், சட்டையில் கறுப்பு ரிப்பன் கட்டியிருந்தனர்.

## அனில்கும்ளே எட்டாவது இடத்தில்



(சென்னை)

சென்னையில் நடந்த போட்டியில் இந்திய அணியின் அனில்கும்ளே 4வது விக்கெட்டை வீழ்த்தியபோது, அதிக விக்கெட் வீழ்த்தியவர்கள் பட்டியலில் ஒன்பதாவது இடத்திலிருந்து எட்டாவது இடத்திற்கு முன்னேறினார். இவர் மேற்கிந்தியத்தீவு வேகப்பந்து வீச்சாளர் அம்புரோசின் 405 விக்கெட்டுகள் சாதனையை முறியடித்தார்.

# பாசிக்குடா கடற்கரையில் மணல் அரிப்பை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

கல்குடாவில் உல்லாசப் பயணிகளை கவர்ந்து இழுக்கும் சுற்றுலா மையம் ஒன்று இருக்கின்றது. அதுதான் பாசிக்குடா கடற்கரையாகும். ஆனால் இந்த பாசிக்குடா கடற்கரையானது கடல் அரிப்பைச் சந்திக்கும் அபாயத்தில் இருக்கின்றமை கல்குடா மக்களுக்கும் அங்கு உல்லாசப் பொழுதைக் களிப்பவர்களுக்கும் மிகவும் வேதனையை அளிக்கும் விடயமாகும்.

இந்த கடலரிப்பு அபாயம் ஏற்படுவதற்கான காரணம் கடலரிப்பைத் தடைசெய்யும் முருகைக் கற்பாறைகளை இப்பகுதி மக்கள் எடுத்து சில விற்பனை முகவர்களுக்கு விற்பனை செய்கின்றனர்.

இதனால் கூடுதலான முருகைக்கற்பாறைகள் அகழ்ந்து எடுக்கப்படுவதால் கடலரிப்பு ஏற்படுகின்றது. இதன்போது நிலப்பரப்பு குறைவடைந்து செல்வதுடன் கடற்பரப்பின் அளவு அதிகரிக்கின்றது. இதனால் எதிர்காலத்தில் மக்கள் வெள்ளப் பெருக்கு போன்ற அனர்த்தங்களைச் சந்திக்கும் ஒரு அபாய நிலையை எதிர்நோக்கிய வண்ணம் இருப்பதா அப்பகுதி மக்கள் ஈழநாதம் எங்கள் குரலுக்கு சுட்டிக்காட்டுகின்றனர்.

இப்பகுதி மக்களின் கவலை இதுதான் பாசிக்குடா கடற்கரையில் உள்ள முருகைக் கற்பாறைகளை சிலர் அகழ்ந்து விற்பனை செய்வதால் கடலரிப்பைச் சந்திக்கும் அளவுக்கு பாசிக்குடா கடற்கரையின் நிலமை இருக்கின்றது. அத்துடன் ஆரம்பத்தில் அதாவது தற்போது அழிந்த நிலையில் காணப்படும்.

உல்லாச விடுதிக்கும் கடற்கரைக்குமான அளவு கூடுதலாகவே இருந்தது ஆனால் தற்போது உல்லாச விடுதிகளை தொடுமளவுக்கு கடற்கரை இருக்கின்றது. இதற்கான முக்கிய காரணம் இந்த முருகைக் கற்பாறைகள் அகழ்ந்து எடுப்பதே எனலாம். என இப்பகுதி மக்கள் தமது கவலையை ஈழநாதமூடாக சொல்கின்றனர்.

முருகைக் கற்களை எடுக்கக்கூடாது என இப் பகுதி பிரதேச செயலாளர், பிரதேச சபை யினர் போன்றோரால் எச்சரிக்கை விடுக்கப்பட்டும் அதனை எவரும் கருத்தில் கொள்ளாது இதனை அகழ்ந்து பணம் சம்பாதிப்பதிலே குறியாக இருப்பதாகவும் அத்துடன் மேற் கூறியவர்களின் எச்சரிக்கைக்குப் பயந்தவர்கள் பகல் வேளைகளில் இதனை எடுக்காது இரவு வேளைகளில் முருகைக் கற்களை எடுத்து பொதி செய்து மாட்டு வண்டிகளில் ஏற்றிச் சென்று விற்பனை செய்வதாக கடற்கரைச் சுற்றாடலில் வசிக்கும் மக்கள் மிகவும் கவலையுடன் தமது மனத்துயரத்தைக் கூறுகின்றனர்.

மேலும் பாசிக்குடா கடற்கரையானது பிளாஸ்ரிக், பொலித்தின் பைகள், இறந்த நிலையிலுள்ள மீன்கள் போன்றவற்றாலும். மாசடைவதுடன் கூடுதலாக முருங்கை கற்பாறைகளை அகழ்வதனால் பாரிய கடலரிப்பை பாசிக்குடாக், கடற்கரை எதிர்நோக்குவதாகவும் கூறுகின்றனர்.

இதனைப் பிரதேச சபையினர் கவனமெடுத்து இத்த கையமுருகைகற்பாறைகளை அகழ்வதைத் தடைசெய்ய வேண்டு மென ஈழநாதம் ஊடாக இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

*சுழியோடி.*

# பட்டிப்பளை உப டிப்போ திறக்கப்படுமா?

பட்டிப்பளையில் நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனியின் உபடிப்போ ஒன்று இற்றைக்கு மூன்று வருடங்களுக்கு முன்பதாக கட்டப்பட்ட நிலையில் காட்சியளிக்கின்றது. இதனை இற்றை வரைக்கும் திறக்கப்படாமல் யாரும் கவனிப்பாரற்ற நிலையில் உள்ளது.

இந்தச் செயற்பாடானது இப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு பூச்சாண்டி காட்டும் ஒரு செயலாகவே எண்ணத் தோன்றுகின்றது. பாராளுமன்றத்துக்குத் தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட இதனை கருத்தில் எடுத்துக் கொள்வதாகத் தென்படவில்லை.

இப்பிரதேச த்தல் உபடிப்போ திறப்பதனால் இப்பிரதேசம் அனுகூலங்களை அனு பவிக்கும் என்பதில் எதுவித ஐயப்பாடும் இல்லை. போக்கு வரத்து வசதியி னை நன்கு திட்டமிடுவதற்கும் இந் த உபடிப்போ பெரிதும் துணைபுரியும்.

எனவே பாராளுமன்ற உறுப்பினர்களே இதனைத் தங்களின் கவன த்திற்கு அறியத்தருகின்றோம்.

*எஸ். கலையன்*

# எங்கள் குரல்

## படுவான்கரை மாணவர்களின் ஆங்கில, கணனி கல்வி வளர்ச்சிக்கு கைகொடுப்பார்களா?

வளர்ந்து வரும் நவீன யுகத்தை எதிர் கொள்வதற்கு மாணவர்களுக்குக் கட்டாயம் ஆங்கிலக் கல்வியும், கணனிக் கல்வியும் அவசியமாகின்றது.

இந்த வகையில் நகர்ப்புறப் பாடசாலைகளில் ஆங்கிலமும் கணனியிம் பிரத்தியேகமான முறைகளில் கற்பிக்கப்படுகின்றன. ஆனால் படுவான்கரைப் பிரதேச பாடசாலைகளில் ஆங்கிலம், கணனிப் பாடங்களைக் கற்பிற்பதற்கு ஆசிரியர்களே இல்லாமல் இருக்கின்றது. இதனால் ஆங்கிலப் பாடம் பழைய மாணவர்கள் என்றால் மாணவர்கள் விளையாடுவதில் தங்கள் காலத்தைப் போக்கிக் கொள்கின்றனர். மற்றும் ஆங்கிலக் கல்வியை மாணவர்கள் ஆர்வத்துடன் கற்கும் விதத்தில் ஆசிரியர்கள் கற்றுக் கொடுப்பதில்லை.

இதனால் ஆங்கிலப் பாடம் என்றாலே ஒரு கசப்பான மனோநிலையில் மாணவர்கள் காணப்படுகின்றார்கள்.

ஒரு மாணவனிடம் இன்று ஆங்கிலப்பாடம் பிடிக்கவில்லையா? என வினாவிய போது அது நம்மட மொழிதானே என்னத்தைப்படிப்பது என்று மறைமுக மாக ஆங்கிலக் கல்வியில் தனது ஆற்றலின்மையை வெளிப்படுத்தினான்.

அது மட்டுமன்றி அண்மை யில் க.பொ.த.சா.த பரீட்சைப் பெறுபேறுகளை உற்று நேக்குமிடத்து இப்பிரதேசத்து மாணவர்களில் அனேகர் ஆங்கிலப் பாடத்தில் சித்தி எய்தாததை இலகுவில் கண்டு கொள்ளலாம்.

எனவே இந்தப் போக்கை இனிமேலும் தொடர விடக் கூடாது. மாணவர்களுக்கு உரிய கல்விச் சூழல்களை உருவாக்கிக் கொடுப்பது அரசின் பணி மாத்திரமின்றி பழைய மாணவர்கள் என்றால் பொது சமூக நலன்புரி நிறுவனங்களும் ஒன்றியங்களும், கிராம அபிவிருத்தி ஒன்றியங்களும் முன்வர வேண்டும்.

பாரிய கல்வி பின்னடைவிலிருந்து எமது படுவான்கரைப் பிரதேச மாணவர்களை மீட்க வேண்டும். இதற்காக அனைத்து கல்விமான்களும் அணி திரள வேண்டும்.

''எழுத்தறிவித்தவனே இறைவனாவான்'' என்னும் கூற்றை நெஞ்சினில் நிலை நிறுத்தி சேவை மனப்பான்மையுடன் பணியாற்ற ஒவ்வொரு கல்விமான்களும் முன்வர வேண்டுமென எங்கள் குரலாக வலம் வரும் ஈழநாதத்தினூடாக எனது ஆதங்கத்தை வெளிப்படுத்திக் கொள்கின்றேன்.

*தமிழகன்*



### சிந்தனைக்கு

சமாதானத்தை நான் ஆத்ம பூர்வமாக விரும்புகிறேன். எனது மக்கள் நிம்மதியாக, சமாதானமாக, சுதந்திரமாக, கௌரவமாக வாழ வேண்டும் என்பதே எனது ஆன்மீக இலட்சியம்.

*மேதகு. வே.பிரபாகரன்.*
*தமிழீழத் தேசியத் தலைவர்*

ஈழநாதம்
கிழக்குப்பதிப்பு EEZHANATHAM
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி :- 065-2226110,
065-2226303,
batti@eezhanatham.com
16-10-2004

# திருமலையில் குளிர்காயும் இனவாதிகள்

சிங்கள இனவாத சக்திகள் வன்முறையைத் தூண்டி திருமலை நகரில் ஒரு இரத்தக் களரியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றமை கவலை தரும் விடயம்.

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு ஊர் காவல் படையினர் விவகாரத்தை பெரிது படுத்தி அதில் அரசியல் குளிர் காய்ந்து கொண்டிருக்கும் சக்திகள் திருமலையில் தமிழ் சிங்கள மக்களிடையே ஒரு இன வன்முறையை தூண்டும் முயற்சியில் செயற்படுகின்றதை அவதானிக்க முடிகின்றது.

தற்போது நிலவும் சமாதானச் சூழலை சீர் குலைத்து தமிழ் சிங்கள சமூகங்களுக்கிடையிலான கலவரத்தை உருவாக்கி தமிழ் இன அழிப்புக்கான அத்திவாரமே தற்போது திருமலையில் மேற்கொள்ளப்படும் சம்பவங்களாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு இற்றைவரை தமிழர் தாயகத்தில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் பயங்கரவாதி என்னும் சட்டையை போர்த்தி சித்திரவதைக் கூடங்களில் தடுத்து வைத்தனர்.

வகை தொகையற்ற விசாரணை, மனித உரிமையை மீறும் சித்திரவதை ஒரு அரசியல் கைதி என்ற போர்வையில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் எல்லாரும் கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டனர்.

பூசா, களுத்துறை என்ற தமிழ் உறவுகளை சிங்கள இராணுவம் விலங்கிட்டு கொண்டு சென்ற கொடூரக் காட்சிகள் நெஞ்சை விட்டு அகலாத நினைவுகள் நிழலாகத் தொடர, அழுது பரிதவித்த பரிதவிப்புக்கள் ஆயிரமாயிரம் தமிழ் இளைஞர்கள் தமது விடுதலைக்காக குரல் எழுப்பி சிறைக் கூடங்களில் கூரை மீதேறி நடத்திய போராட்டங்கள் இதனை விட தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழர்கள் வெலிக்கடை, பிந்துனுவெவ சித்திரவதைக் கூடங்களில் கொன்றழிக்கப்பட்ட வரலாறுகள் எல்லாம் எமது தமிழ் இனத்திற்கு இழைக்கப்பட்ட வரலாற்றுத் துரோகங்கள்.

இன்று கூட பல நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் எது வித விசாரணையுமின்றி சிறைக் கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் திருமலையில் விடுதலைப் புலிகளிடம் தடுப்புக் காவலில் உள்ள இரு சிங்கள ஊர் காவல் படையினர் விவகாரத்தை பூதாகரமாக்கி இனவாத சேற்றை அள்ளி வீசும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போதுள்ள சமாதானச் சூழலில் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை பலப்படுத்த வேண்டிய சக்திகள் புற நடையான போக்கை கடைப்பிடித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

அது மட்டுமன்றி இனவாத சக்திகள் தங்கள் செயற்பாடுகளை கடை பரப்பி வியாபாரம் செய்யும் சந்தைக் களமாக திருமலை மாறிச் செல்கின்றதா? என்ற ஐயமும் எழு கின்றது.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியின் போது குரங்கு பாஞ்சான் விவகாரத்தை பூதாகரமாக்கி இனவாதிகள் குளிர் காய்ந்தது போல் தற்போது ஊர் காவல் படையினர் விவகாரத்தை ஊன்றிப் பிடிக்கின்றனர். எனவே இரு சமூகங்களுக்குமிடையில் புரிந்துணர்வை வலுப்படுத்தி சமாதானத்தை முன்னெடுக்க முன்வர வேண்டுவது அவசியம்.

# வவுனியா மாவட்டத்தில் முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவிக்கும் விழா

(நமது நிருபர்)

வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நெடுங்கேணி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம். வவுனியா அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் மற்றம் முன்பள்ளி கல்வி மேம்பாடு நிலையம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நெடுங்கேணி மகா வித்தியாலயத்தில் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

காலை 10.30 மணியளவில் நெடுங்கேணி பிரதேச முன்றலில் இருந்து முன்பள்ளி ஆசிரியர்களை பாடசாலை மாணவர்கள் பாண்டு வாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்து வந்து நெடுங்கேணி மகா வித்தியாலயத்தின் முன்றலில் மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமாகியது.

தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடி ஏற்றல் நிகழ்வு இடம்பெற்றது. தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் (சுதா) ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து அக வணக்கத்துடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக கொடியினை மாவட்டப் பணிப்பாளர் எஸ்.ரி.மூர்த்தி முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையக் கொடியினை உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேச பாதமும் ஏற்றி வைத்தனர்.

வடக்கு வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளரின் சிறப்புரையும், தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்ட பணிப்பாளரின் உரையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட நெடுங்கேணி பிரதேச செயலாளர் பரமானந்தன் அவர்களின் உரையும் உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.கந்தசாமியின் உரையும் தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளனின் உரையும் இடம் பெற்றது.

## இன உறவுகள் ஆட்டோ சாரதிகளின் கைகளில்

(வி.பி.சிவப்பிரகாசம்)

''அக்கரைப்பற்று பல்வேறு சமூகங்கள் வாழும் ஒரு மத்திய கேந்திரம்.இந்தக் கேந்திரத்தில் 250 ஆட்டோக்கள் சேவையில் இருக்கின்றது. இன்று 250 சாரதிகள் ஒன்று சேர்ந்த தங்களுக்கான ஒரு அமைப்பை ஏற்படுத்தி இருப்பது வரவேற்கத்தக்கது. இது இந்தப் பிரதேசத்தில் சமூகங்களின் உறவைப் பிரதிபலிக்கும் வகையில் முஸ்லிம், தமிழ், சிங்கள மக்கள் இணைந்த ஒரு அமைப்பாக இருப்பதினால் இன்று கொழுந்து விட்டு எரியும் இனவாத முற்றாக ஒழிப்பது உங்கள் கையில் இருக்கின்றது''. இவ்வாறு செவ்வாய்க்கிழமை மாலை அக்கரைப்பற்று பொலிஸ் மைதானத்தில் நடைபெற்ற ஆட்டோச் சாரதிகள் கூட்டத்தில் கலந்து கொண்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.எம்.ஐ.எம்.புகாரி குறிப்பிட்டார்.

## சஞ்சிகைகள் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் கருவியாக செயற்படுகிறது

**மாவட்ட நீதிபதி ரி.எல்.ஏ.மனாப்**

(மருதமுனை நிருபர்)

சஞ்சிகைகள் மக்களுக்கு நல்ல தகவல்களை தருவது மட்டுமன்றி அது இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் கருவியாகவும் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் முனைப்புச் சஞ்சிகையும் நல்ல பணியைச் செய்து வருகின்றது. முனைப்பின் காத்திரமான பங்களிப்புக்கள் பல இலக்கிய வாதிகளை உருவாக்கியுள்ளது.

இவ்வாறு முனைப்புச் சஞ்சிகையின் 12வது இதழ் வெளியீட்டு விழா அண்மையில் (2004.10.08) மருதமுனை மக்கள் மண்டபத்தில் நடைபெற்ற போது பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய மாவட்ட நீதிபதி ரீ.எல்.ஏ.மானப் தெரிவித்தார்.

சஞ்சிகையின் ஆசிரியர் பாரி மௌலானா தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில் மற்றமொரு பிரதம அதிதியாக மாவட்ட நீதிபதி கே.தட்சணாமூர்த்தியும் கலந்து கொண்டார். பெருந்தொகையான இலக்கிய வாதிகள் கலந்து கொண்ட இவ்விழாவில் நீதிபதி மானப் தொடர்ந்து உரையாற்றுகையில் கடந்த காலங்களில் சில இடர்பாடு காரணமாக முனைப்பு வெளிவராமல் தடைப்பட்டிருந்தமை கவலைக்குரியதாகும்.

நீண்ட இடைவேளைக்குப் பின் மீண்டும் முனைப்பு வெளிவந்திருப்பது இலக்கியப் பரப்பிலே நல்ல திருப்பமாகும் என்றார்.

# முன்பள்ளி சிறார்களின் பெற்றோர்க்கு கருத்தரங்கு

(வேதசகா)

சம்மாந்துறை வலய முன்பள்ளிக் கல்விப் பிரிவு முன்பள்ளிச் சிறார்களின் பெற்றோர்களுக்கு கல்வி விழிப்பூட்டல் செயலமர்வுகளை நடாத்தி வருகின்றது.

அதன் ஒரு அங்கமாக சம்மாந்துறை அல்-உஸ்வா பாலர் பகற்பராமரிப்பு நிலையத்தில் புதனன்று (13-10-2004) சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். ரீ.ஏ.தௌபீக் தலைமையில் செயலமர்வு நடைபெற்றது.

முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ. அகமட் ஏற்பாடு செய்த இச்செயலம ர்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்க ளான எஸ்.எல்.ஏ.சலாம், எம்.எச். அசீஸ் மெய்டீன், உதவிக் கல்விப்பணிப்பாளர் வ.ரி. சகாதேவராசா ஆகியோர் வளவாளர்களாகச் செயற்பட்டனர்.

அங்கு செல்வி. றிகாசா, திருமதி. லுனிபறா ஆகியோர் ஆசிரியைகளாக செயற்பட்டு வருகின்றனர். இதே போன்ற செயலமர்வுகள் சம்மாந்துறை அல்-மர்ஜான் மகளிர் கல்லூரியிலும், 15ம் கிராமம் விவேகானந்தா வித்தியாலயத்திலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை மாவட்டத்தில் கட்டட பொருட்களின் விலை அதிகரிப்பு!

**மக்கள் கவலை**

(வி.ரி. சகாதேவராசா)

அம்பாறை மாவட்டத்தில் கட்டட நிர்மாணப் பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது குறித்த கவலை தெரிவிக்கப்படுகின்றது.

2000 செங்கற்களின் விலை 4500 ரூபாவிலிருந்து திடீரென 6250 ரூபாவாக எகிறிப் பாய்ந்துள்ளது.

ரூபா 450 அளவில் விற்பனை செய்யப்பட்ட ஒரு பக்கட் சீமெந்தின் விலை ரூபா 515 க்கு விற்பனை செய்யப்படுகின்றது. சக்கைக் கல் லோட்டின் விலை ரூபா 1800 இலிருந்து ரூபா 2350 ஆக அதிகரித்துள்ளது.

அதேபோன்று கம்பியின் விலை இரட்டிப்பாகியுள்ளது. என்ன காரணம் என்று கேட்டால் டீசல் விலையுயர்வு என்று சொல்லப்படுகின்றது.

ஆற்று மண்ணின் விலையும் ரூபா 300 ஆல் கூடியுள்ளது. இந்நிலையில் நாளாந்த வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாது திண்டாடிக் கொண்டிருக்கும் நடுத்தர வர்க்க மக்கள் வீடு கட்டுவதை நினைத்துப் பார்க்க முடியுமா?.



பட்டிருப்பு கல்வி வலய அழகியற் கல்விப் பிரிவு கடந்த 01.10.2004-02.10.2004 ஆம் திகதிகளில் மட்-களுதாவளை ம. வித்தியாலயத்தில் நடாத்திய அழகியல் தின விழா-2004ல் விழாக் குழுத் தலைவர் திரு.சி.டானியல் (அழகியற் கல்வி உதவிப் பணிப்பாளர்) தலைமையுரையாற்றுவதையும், மற்றும் மாணவர்களின் கை வண்ணத்தில் உருவான படங்களையும், வில்லிசை பாடும் மாணவிகளையம் படத்தில் காணலாம். (படம்- ரகுலக்ஷனா)

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

# முறிகண்டியில் வாகன விபத்து இருவர் பலி! அறுவர் படுகாயம்.

(நமது நிருபா)

முறிகண்டிப் பகுதி ஏ-9 வீதியில் நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் இடம் பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிர் இழந்ததுடன் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களை தமிழீழ காவல் துறையினர் கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதித்துள்ளனர். காயமடைந்தவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருந்ததால் அவர்களை யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்க ப்படுகின்றது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த டொல்பின் வான் ஒன்றும், புளியங்குளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறியும் நேருக்கு நேர் மோதியதிலே இவ்விபத்துச் சம்பவம் ஏற்பட்டுள்ளது.

# அரசடித்தீவு மகாவித்தியாலயத்தில் இன்று ஏணி நூல் வெளியீடு

(கி.ரகுலக்ஷனா)

மட் அரசடித்தீவில் விக்னேஸ்வரா மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று 'ஏணி' கவிதைத் தொகுப்பு நூல் வெளியிடப்படவுள்ளது.

இன்று காலை 9.00 மணியளவில் பழைய மாணவர் சங்கத் தலைவர் கி.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மண்முனை தென் மேற்கு பிரதேச செயலாளர் சி.அமலநாதன் பட்டிப்பளை கோட்டக்கல்வி அதிகாரி ந.தயாசீலன் மட்டு அம்பாறை கல்விப் பொறுப்பாளர் வெ.விமல்ராஜ் சிறப்பு அதிதியாக அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலய அதிபர் த.சோமசுந்தரம் ஆலயப்பரிபாலன சபைத் தலைவர் வ.சிந்தாத்துரை ஆகியோரும் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலரும் பாடசாலை மாணவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

**போர் நிறுத்த..................**

சமாதானப் பேச்சுக்களின் நிலைப்பாடு மற்றும் யுத்தநிறுத்த ஒப்பந்தம் போன்றவை குறித்து சு.ப. தமிழ்ச்செல்வன் ஓர் விவரணக் கருத்துரை வழங்கினார். தற்போதைய நிலைப்பாடுகளை விரிவாகக் கேட்டறிந்த இராஜாங்க செயலாளர், போரினால் பாதிப்படைந்த மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதில் பின்லாந்து அரசு தனது முழுமையான ஒத்துழைப்பையும் உதவியையும் வழங்கும் என்று நம்பிக்கை வெளியிட்டதுடன், சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கும்படி இரு தரப்பினருக்கும் அவசர வேண்டுகோளையும் விடுத்துள்ளார்.

இராஜாங்க செயலாளரைச் சந்திக்குமுன்னர், வெளிநாட்டு அலுவல்களுக்குப் பொறுப்பான இராஜாங்க செயலாளர் போலா மொய்சன்டர் அவர்களைச் சந்தித்த சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர், போரினால் பாதிப்படைந்த பகுதிகளுக்கான மனிதாபிமான நிவாரண உதவிகள் குறித்து விரிவாக ஆராய்ந்தனர். இச்சந்திப்பை ஆசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான கஜ்யா ஆல்பேர்ஸ் அவர்கள் ஒழுங்குசெய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**வாழைச்சேனை............**

விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

வாழைச்சேனை பொலிசார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். மட்டக்களப்பு வாழைச்சேனை விநாயகபுரத்தில் வியாழன் இரவு இடம் பெற்ற மற்றுமொரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளம் குடும்பஸ்தரொருவர் படுகாயமடைந்தள்ளார்.

நெஞ்சில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள செல்லத்துரை ஆனந்தன் (வயது 32) என்ற இந்த நபர் தனியார் மதுபான உற்பத்தி நிறுவனமொன்றில் பணியாற்றுபவர் என தெரிவிக்கப்படுகின்றது.

வியாழன் இரவு 8.15 மணியளவில் இவரது வீட்டிற்குச் சென்ற இனந் தெரியாத நபர்கள் இருவர் கடிதமொன்று தர இருப்பதாகக் கூறி வெளியே வருமாறு அழைத்து துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார்க்ள். இச் சம்பவம் குறித்து வாழைச்சேனை பொலிசார் விசாரணைகளை மேற்கொன்டு வருகின்றனர்.

**நேற்று..................**

வெள்ளிக் கிழமை நண்பகல் விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கணபதிப்பிள்ளை லெட்சுமி (50) என்பவரே மரணமானார். கற்பகம்(53), தெய்வானை(54), தங்கராசா (50), சதிஸ்வரன்(32) ஆகிய நால்வரும் காயமடைந்து செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பஸ் வண்டியின் முன்சில்லு ஒன்று உடைந்ததன் காரணமாக இந்த விபத்து நிகழ்ந்திருக்கலாமென ஏறாவூர் பொலிஸார் தெரிவிக்கின்றனர். பஸ் வண்டி குடை சாய்ந்ததில் மின்கோபுரம் மூன்று சரிந்து விழுந்ததனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் வந்தாறுமூலை செங்கலடி, ஏறாவூர் போன்ற பகுதிகளுக்கு ஹபரணை வழி மின் விநியோகம் மாலை 5.00 மணி வரை தடைப்பட்டிருந்தது. ஏறாவூர்ப் பொலிஸார் இவ்விபத்துச் சம்பவம் குறித்து விசாரணை நடாத்துகின்றனர்.

## ஊடகவியல் பயிற்சிப் பட்டறை

மட்டக்களப்பு -அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு ஊடகத்துறை தொடர்பான ஒருவார கால வதிவிடப் பயிற்சிப் பட்டறையை மட்டக்களப்பு எகெட் நிறுவனத்துடன் இணைந்து தமிழ்- இளம் ஊடகவியலாளர் ஒன்றியம் ஒழுங்கு செய்துள்ளது. ஊடகத்துறையில் பயிற்சிபெற விரும்பும் 30 வயதிற்குட்பட்ட க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எதிர்வரும் ஒக்டோபர் 30ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை தலைவர், தமிழ்- இளம் ஊடகவியலாளர் ஒன்றியம். 143-20, எல்லை வீதி மட்டக்களப்பு என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

# முடிந்தால் சர்வஜன வாக்கெடுப்பை நடத்திப் பாருங்கள் அதாவுல்லாவுக்கு அரியம் எம்.பி சவால்

(நமது நிருபர்)

வடக்குக் கிழக்கில் முடிந்தால் சர்வசன வாக்கெடுப்பை நடாத்திப் பாருங்கள் உண்மை நிலை விளங்கும் என நரித்தன அரசியல் நடாத்தும் முஸ்லிம் அரசியல் பிரமுகர்களுக்கு வேண்டுகோள் விடுப்பதாக மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமைச்சர் அதாவுல்லாவின் ஊடகப் பிரிவு ''கிளிப்பிள்ளை அரசியல் நடத்துகிறார். அரியநேத்திரன்" என்ற தலைப்பில் அறிக்கைக்கு பதில் தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கும், சுயநிர்ணய உரிமைக்கும், நிரந்தரத் தீர்வுக்கும் வடக்குக் கிழக்கு இணைந்த தாயகத்தினால் மட்டுமே முடியும். கிழக்கு வேறு வடக்கு வேறு என பிரிந்திருப்பது கிழக்கு வாழ் தமிழ் முஸ்லிம் மக்களின் பூர்வீக வாழ்விடங்களை சிங்களக் குடியேற்றத்தால் இழக்க நேரிடும். இன்று கிழக்கு மகாணத்தில் அமைச்சர் அலாவுல்லாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அம்பாறை மாவட்டத்தில் என்ன நடக்கின்றது? அங்குள்ள முஸ்லிம் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களான திஸவாபி, பொத்தான, நீத்த, அறுகம்ப போன்ற பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நடக்கின்றன. ஏன் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு உகனை, பொத்துவில் வீதியை அண்டியுள்ள இடங்களில் காடுகளை வெட்டி துப்பரவு செய்து தமது ஜீவனோபாயத் தொழிலில் ஈடுபடச் சென்ற முஸ்லிம் மக்களை சிங்ளக் காடையர்கள் சிலர் இராணுவத்தினரின் உதவியுடன் தடுத்து திருப்பியனுப்பியபோது அரசியலில் அங்கம் வகிக்கும் அமைச்சர் அதாவுல்லா என்னசெய்தார்?

தமிழ் தேசியப் போராட்டத்தில் முஸ்லிம் இளைஞர்கள் முஸ்லிம் மக்கள் ஆற்றிய பங்களிப்பை நான் என்றும் கொச்சைப் படுத்வில்லை தமிழ் மக்களின் உண்மையான போராட்டத்தினை முஸ்லிம் மக்கள் பாரிய பங்களிப்பை செய்வதை சகித்துக் கொள்ள முடியாத சிங்கள தேசம் கடந்த 1990ம் ஆண்டு எமது இரு சமூகத்தையும் மோத விட்டு வேடிக்கை பார்ப்பதில் வெற்றி கண்டது. இதன் விளைவுகளாகத் தான் முஸ்லிம் ஊர்காவல் படை போன்ற போர்வையில் நிறுவி தமிழ் முஸ்லிம் உறவில் வேண்டத்தகாத சம்பவங்கள் இடம்பெற்றது. இதனால் எமது இரு சமூகமும் பாதிக்கப்பட்டது. இன்னும் இது தொடரக் கூடாது என்பதற்காகத் தான் நாம் தமிழ் முஸ்லிம் உறவை வலியுறுத்தி வருகின்றோம்.தமிழ் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் நரித்தன அரசியல் நடத்துவதோ, அமைச்சர் பதவிகளை எடுத்து ஆசனங்களைத் தக்கவைத்து சுயலாபம் தேடுவதோ எமது நோக்கமல்ல கடந்த 55 வருடங்களாக சுயநிர்ணய உரிமைக்காக அகிம்சைப் போராட்டங்களை நடாத்தி அது சாத்தியப்படாத விடத்து இரண்டு சகாப்தங்களுக்கு மேலாக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடியதால் தான் இன்று எமது போராட்டம் சர்வதேசத்தில் கூர்மை பெற்றுள்ளது. அந்தப் போராட்டத்தின் உண்மை நிலையை உணர வைத்து தமிழ் மக்களின் விடுதலையை வென்றெடுப்பதற்கான சகல தரப்பினரிடையே பேச்சுவார்த்தைகளையும் போராட்டங்களையும் நடாத்துவதற்காகத் தான் நாம் பாராளுமன்ற உறுப்பினர்களாக தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்டோம். எங்களைப் பற்றியும், எமது அரசியல் நிலைப்பாட்டைப் பற்றியும் எமக்கு வாக்களித்த வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். சுயலாபம் தேடி அமைச்சர் பதவியை தக்கவைத்து நரித்தன அரசியல் நடாத்தும் அரசியல் வாதிகள் எ[illegible]மைப் பற்றி கவலை கொள்ளத் தேவையில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

கிழக்கின் சரித்திரத்தை நிதானமாக புரட்டிப் பார்த்ததால் வடகிழக்கு இணைப்பு தான் நிரந்தரத் தீர்வு என்பதை இன்று பல முஸ்லிம் அரசியல் வாதிகள், முஸ்லிம் புத்திஜீவிகள், முஸ்லிம் இளைஞர்கள் உணர்ந்துள்ளனர்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் 1987 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு வடகிழக்கு இணைப்பு ஏற்படுவதற்கு முன் இலங்கை சுதந்திரமடைந்த 1947ம் ஆண்டு தொடக்கம் வடகிழக்கு இணைப்பு இணைந்த சுயநிர்ணய உரிமைக்காகத் தான் எமது தமிழ் தலைவர்கள் பல அகிம்சைப் போராட்டங்களை நடத்தியு[illegible] அதன் பின் ஆயுதப் போராட்டம் இன்று வரை இடம்பெறுவதும் வடக்குக் கிழக்கு இணைந்த தாயக விடுதலைக்காகவே தான் என்பதை உணராமல் இருப்பது வெட்கக் கேடான செயலாகும்.

கிழக்கு இணைக்கப்பட்டால் போராட்டம் முடிவுக்கு வந்திருக்கும் என நான் குறிப்பிடவில்லை. வடக்குகிழக்கு வேறாகப் பிரிய வேண்டுமென எண்ணியிருந்தால் இப்போராட்டம் எப்போதே முற்றுப் பெற்றிருக்கும் என்று தான் நான் தெரிவித்தேன். உண்மை அது தான் வடக்குவேறு கிழக்குவேறு என பிரியவேண்டுமென அமைச்சர் அதாவுல்லா நினைப்பதைப் போன்று கிழக்கு வாழ் தமிழ் மக்கள் நினைத்து இருந்தால் இப்போராட்டம் 1990ம் ஆண்டுக்கு முன்பே முற்றுப் பெற்றிருக்குமென்பதை மீண்டும் அறுதியிட்டு தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கொக்கட்டிச்சோலை..........**

வகப் பணியக மேலாளர் பா. சிறிஸ்கந்தராசா ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பட்டிப்பளைப் பிரதேச செயலக பிரிவிலுள்ள பாடசாலைகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு 500 ரூபா பெறுமதியான வைப்புக் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டதுடன், விஷேட சிறப்பு அதிதிகளின் உரையும் இடம் பெற்றன. அத்துடன் அரசடித்தீவுக் கிராமத்தில் மட்-தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உப அலுவலகமும் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**குருவில்..........**

தரவிட்டுள்ளார்.

அத்தோடு இச்சம்பவம் தமண பொலிஸ் நிலையப் பகுதிக்குள் நடைபெற்றமையால் இது சம்மந்தமாக மேலதிக தரவுக்காக சேகரித்துத் தருமாறு அக்கரைப் பற்று நீதவான் தமண பொலிசாரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அகவை நான்கிலே



அபிராந்தன்

மட்டக்களப்பு
கள்ளியங்காடு
நீர்பாசனக் குடிமனையில்
16-10-2004ல் நான்காவது
பிறந்தநாளைச் சிறப்பாகக்
கொண்டாடும் இவரை

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்
தன் மகனைச் சான்றோன்
எனக்கேட்ட தாய்.

என்ற ஈரடிக்கேற்ப வாழ வாழ்த்துபவர்கள்
அப்பா - ச.மதிவண்ணன்,
அம்மா வதனா மதிவண்னன்,
தங்கை ம. புவேனியா -ரிபாயா-
அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமாமார்,
சித்திமார், பாட்டிமார், மாமிமார், சித்தப்பாமார்,
மச்சான்மார், மச்சாள்மார், அக்காமார்,
அண்ணாமார் மற்றும் அனைவரும்.

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 16. 10. 2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.